In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளியீடு எண்: 522.

C.S.S

ஓ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

என்றும் இன்பம் தழைக்க

இறை வழிபாடு

திருவாவடுதுறை ஆதீனம்

2005

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

என்றும் இன்பம் தழைக்க

இறைவழிபாடு

இது

திருவாவடுதுறை ஆதீனம்

குருமுதல்வர்

அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

மகரத்தலைநாள் (தை – அசுவதி)

குருபூசை விழா மலர்

திருவாவடுதுறை ஆதீனம்.

17.1.2005

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குரு நமச்சிவாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

– மாபாடியகாரர்அருள்திரு மாதவச் சிவஞான சுவாமிகள்.

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அ:ப்செட் அச்சகம்,
திருவாவடுதுறை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதினம் குருமுதல்வர்

அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

வாழ்த்த வல்லார் மனத்து உள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெருமான் என்று இறைஞ்சியும்
ஆத்தம் செய்து ஈசன் அருள் பெறலாமே.

–திருமந்திரம்.

மானிடப் பிறவி வாய்த்தது சிவபிரானை வழிபட்டுப் பிறவிநோய் ஒழிந்து என்றும் இன்பம் பெருக இருப்பதற்கே. மனத்தால் நினைதல், வாயால் வாழ்த்தல், காயத்தால் வணங்குதல் என்னும் மூன்று வகையான வழிபாட்டுக்களுள் வாயால் வாழ்த்துதல் தனிச் சிறப்புடையது. முன்னைத் தவமுதிர்ச்சியால் சிவபிரானைக் காணப்பெற்ற பெருமக்கள் அருளிச் செய்த அருள் மொழிகளாகிய தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளாலும், திருப்புகழாலும் அவனை வாழ்த்துதல் வேண்டும். அவ் அருள் பாடல்களைப் பலமுறை திரும்பத் திரும்பச் சொல்லி அவற்றின் பொருளை உணர்ந்து உணர்ந்து, உள்ளம் உருக நினைத்து, உடல் குழைய வணங்கிப் பயன் பெறுதல் வேண்டும்.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் ஐந்து திருமுறைகளிலிருந்தும் ஒவ்வொரு பாடலையும், அவற்றோடு திருக்கோவையார், திருப்புகழ் ஆகிய அ ருட் பனுவல்களிலிருந்து ஒவ்வொரு பாடலையும் ஓதி அன்புடன் வழிபட்டு வருதல் ஆதீன மரபாக இருந்து வருகிறது.

அன்பர்கள் ஒவ்வொரு நாளும் பஞ்சபுராணப் பாடல்களையும் அவற்றோடு திருக்கோவையார், திருப்புகழ் பாடல்களையும் ஓதி வழி படுவதற்கு உதவியாகப் பாடல்களைத் தொகுத்து வெளியிடுதல் வேண்டும் என்று **என்றும் இன்பம் தழைக்க இறை வழிபாடு** எனும் இந்நூல் சீர் வளர் சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள் திருவுளப் பாங்கின் வண்ணம் மகரத்தலைநாள் குருபூசை விழாமலராக வெளியிடப் பெறுகிறது. அன்பர்கள் இந்நூலினைப் பெற்று அருள்வளம் நிறைந்த திருப்பாடல்களை நாளும் ஓதி நலங்கள் எல்லாம் எய்தி இன்புற விரும்புகிறோம்.

திருவாவடுதுறை ஆதீனம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஞாயிற்றுக் கிழமை

திருச்சிற்றம்பலம்.

1. கொள்ளும் காதன்மை; பெய்துறும் கோல்வளை;
உள்ளம் உள்கி உரைக்கும் திருப்பெயர்;
வள்ளல் மாமயி லாடு துறையுறை
வெள்ளம் தாங்கு சடையனை வேண்டியே.

–தேவாரம்.

2. உன்னை உகப்பன் குயிலே;
உன்துணைத் தோழியும் ஆவன்;
பொன்னை அழித்தநன் மேனிப்
புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த
வள்ளல் பெருந்துறை மேய
தென்னன் சேரலன் சோழன்
சீர்புயங்கன் வரக் கூவாய்.

–திருவாசகம்.

3. தெள்ளு நீறவன் நீறு என்னுடல் விரும்பும்;
செவி, அவன் அறிவுநூல் கேட்கும்;
மெள்ளவே அவன்பேர் விளம்பும் வாய்; கண்கள்
விமானமே நோக்கிவெவ் உயிர்க்கும்;
கிள்ளைபூம் பொதும்பில் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம் பலைசெய் கீழ்க் கோட்டூர்
வள்ளலே மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தனே என்னும் என் மனனே.

–திருவிசைப்பா.

4. மன்னுக தில்லை; வளர்கநம் பத்தர்கள்;
வஞ்சகர் போய் அகல;
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்க;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

–திருப்பல்லாண்டு.

5. மூவ லுர்உறை முதல்வரைப் பரவிய மொழியால்
மேவு காதலில் ஏத்தியே விருப்பொடும் போந்து
பூவ லம்புதண் புனல்பணைப் புகலியர் தலைவர்
வாவி சூழ்திரு மயிலாடு துறையினில் வந்தார்.

–பெரியபுராணம்.

6. திருவளர் தாமரை சீர்வளர்
காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்
காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி
னொல்கி யனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக்
கொடிபோன் றொளிர்கின்றதே.

–திருக்கோவையார்.

7. துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லைநெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யு ருகு மாணைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே
வள்ளல் தொழுஞானக் கழலோனே
வள்ளி மண வாளப் பெருமாளே.

–திருப்புகழ்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திங்கட் கிழமை

திருச்சிற்றம்பலம்.

1. பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈச னெமபெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே.

–தேவாரம்.

2. மருவினிய மலர்ப் பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமான் என்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமாறு
அரு ளெனக்கிங் கிடைமருதே இடங்கொண்ட அம்மானே.

–திருவாசகம்.

3. அணியுமிழ் சோதி மணியுனுள் கலந் தாங்கு
அடியனேன் உள்கலந்து அடியேன்
பணிமகிழ்ந் தருளும் அரிவைபா கத்தன்
படர்சடை விடம்மிடற் றடிகள்
துணியுமிழ் ஆடை அரையிலோர் ஆடை
சுடர் உமிழ் தரஅதன் அருகே
மணியுமிழ் நாகம் அணியுமிழ்ந் திமைப்ப
மருவிடம் திருவிடை மருதே.

–திருவிசைப்பா

4. சேலுங் கயலும் திளைக்கும்
கண்ணார் இளங் கொங்கையில் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று
புண்ணியர் போற்றி சைப்ப
மாலும் அயனும் அறியா நெறி
தந்துவந்தென் மனத் தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
றானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

–திருப்பல்லாண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. ஓங்குதிருப் பதிகம் ஓடேகலன் என்றெடுத்தருளித்
தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்கும் தன்மை யினால்
ஈங்கெனையா ளுடைய பிரான் இடைமரு தீதோ என்று
பாங்குடைய இன்னிசையால் பாடிஎழுந் தருளினார்.

–பெரியபுராணம்.

6. குன்றங் கிடையுங் கடந்துமர் கூறும் நிதி கொணர்ந்து
மின்றங் கிடைநும் மையும் வந்து மேவுவன் அம்பலஞ்சேர்
மன்றங் கிடைமரு தேகம்பம் வாஞ்சியம் அன்ன பென்னைச்
சென்றாய் கிடைகொண்டு வாடா வகைசெம்பு தேமொழியே.

–திருக்கோவையார்.

7. இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழ லோனே
கருணை நெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே.

–திருப்புகழ்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செவ்வாய் கிழமை

திருச்சிற்றம்பலம்.

1. செல்வமல்கு திரு மங்கலக்குடி
செல்வமல்கு சிவநியமத்தராய்ச்
செல்வமல்கு செழுமறை யோர் தொழச்
செல்வன் றேவி யொடுந் திகழ் கோயிலே

–தேவாரம்.

2. நானும் என் சிந்தையும் நாயகனு கெவ்விடத்தோம்
தானும் தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்
வானும் திசைகளும் மாகடலும் ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ

–திருவாசகம்.

3. பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோறு அமுதம் ஒத்து அவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருஉரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே.

–திருவிசைப்பா.

4. சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கன்மால் எங்கும் திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாம் குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக் கமுதை என் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

–திருப்பல்லாண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. கஞ்சனூர் ஆண்டதங் கோவைக்
கண்ணுற் றிறைஞ்சிமுன் போந்து
மஞ்சணி மாமதில் சூழும்
மாந்துறை வந்து வணங்கி
அஞ்சொல் தமிழ் மாலை சாத்தி
அங்ககன் றன்பர்முன் னாகச்
செஞ்சடை வேதியர் மன்னுந்
திருமங்க லக்குடி சேர்ந்தார்.

–பெரியபுராணம்.

6. சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின்
ஆய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி
யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ
லாம்புகுந் தெய்தியதே.

–திருக்கோவையார்

7. உரத் துறை போதத் தனியான உனைச் சிறி தோதத் தெரியாது
மரத்துறை போலுற் றடியேனும் மலத்திருள் மூடிக் கெடலாமோ
பரத்துறை சீலத் தவர் வாழ்வே பணித்தடி வாழ்வுற் றருள்வோனே
வரத்துறை நீதர்க் கொருசேயே வயித்திய நாதப் பெருமாளே.

–திருப்புகழ்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புதன் கிழமை

திருச்சிற்றம்பலம்.

1. மாயிரு ஞாலம் எல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிரும் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல ஊரர்க்கு அம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே.

–தேவாரம்.

2. குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தை வாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீ என் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என் இரக்கேனே.

–திருவாசகம்.

3. பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப்
புகழாளர் ஆயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய் சீர்
மிகுகா விரிக்கரை மேவிய
ஐயா திருவா வடுதுறை
அமுதேஎன் றுன்னை அழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக் கொன்று
அருளாது ஒழிவது மாதிமை யே.

–திருவிசைப்பா

4. தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு இவ்
அண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற் கோயிலும்
போனகமும் அருளிச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசு வைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

–திருப்பல்லாண்டு.

5. நச்சி இன்தமிழ் பாடிய ஞானசம் பந்தர்
இச்சையே புரிந்த தருளிய இறைவரின் அருளால்
அச்சிறப் பருள் பூதமுன் விரைந்தகல் பீடத்து
உச்சி வைத்தது பசும்பொன் ஆயிரம் கிழி ஒன்று.

–பெரியபுராணம்.

6. காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தாமணி யணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர் தஞ்சங்க நிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கும் ஊதியமே.

–திருக்கோவையார்.

7. வசனமிக வேற்றி மறவாதே மனது துய ராற்றி லுழலாதே
இசைபயில்ச டாக்ஷ ரமதாலே இகபர செள பாக்ய மருள்வாயே
பசுபதிசி வாக்ய முணர்வோனே பழநிமலை வீற்ற ருளும் வேலா
அசுரர் கிளை வாட்டி மிகவாழ அமரர் சிறை மீட்ட பெருமாளே.

–திருப்புகழ்



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வியாழன் கிழமை

திருச்சிற்றம்பலம்.

1. நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினம்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனம்துருவி மணிமகுடத்து ஏறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்
நல்லூர்எம் பெருமானார் நல்ல வாறே.

–தேவாரம்.

2. இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்
அணையார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

–திருவாசகம்.

3. மங்கையோடு இருந்தே யோகுசெய் வானை
வளர்இளம் திங்களை முடிமேல்
கங்கையோடு அணியும் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
அங்கைஓடு ஏந்திப் பலிதிரி கருவூர்
அறைந்தசொல் மாலையால், ஆழிச்
செங்கையோடு உலகில் அரசுவீற் றிருந்து
திளைப்பதும் சிவன்அருட் கடலே.

–திருவிசைப்பா

4. நிட்டை இலாஉடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அட்ட மூர்த்திக்கு என் அகம்நெக ஊறும்
அமிர்தினுக்கு ஆலநிழல்
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

–திருப்பல்லாண்டு.

5. நன்மைபெருகு அருள்நெறியே
வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார்
வணங்கி மகிழ்ந்து எழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை
முடிக்கின்றோம் என்று அவர்தம்
சென்னிமிசைப் பாதமலர்
சூட்டினான் சிவபெருமான்

–பெரியபுராணம்.

6. ஆனந்த வெள்ளத் தழுந்துமொர் ஆருயிர் ஈருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம்வற் றாதுமுற் றாதிவ் வணிநலமே.

–திருக்கோவையார்.

7. இசைந்த ஏறுங் கரியுரி போர்வையுங் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

–திருப்புகழ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெள்ளிக் கிழமை

திருச்சிற்றம்பலம்.

1. பரந்த பாரிட மூரிடைப்பலி பற்றிப் பார்த் துணுஞ் சுற்றமாயினீர்
தெரிந்தநான் மறையோர்க் கிடமாய திருமிழலை
இருந்துநீர் தமிழோடிசை கேட்கு மிச்சை யாற்காசு நித்த னல்கினீர்
அருந்தண் வீழிகொண்டீரடி யேற்கு மருளுதிரே.

–தேவாரம்.

2. பங்கயம் ஆயிரம் பூவினில் ஓர் பூக்குறையத்
தங்கண் இடந்து அரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம் மாற்கு அருளியவாறு
எங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ.

–திருவாசகம்.

3. ஆயிரம் கமலம் ஞாயிறு ஆயிரம்முக்
கண்முக கரசர ணத்தோன்
பாயிரும் கங்கை பணிநிலாக் கரந்த
படர்சடை மின்னுபொன் முடியோன்
வேயிருந் தோளி உமை மணவாளன்
விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள்
போற்றுவார் புரந்தரா திகளே.

–திருவிசைப்பா

4. சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் ; பெற்றது
ஆர்பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மண்வாளனுக்கு ஆள்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

–திருப்பல்லாண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. காலநிலைமை யாலுங்கள் கருத்தில் வாட்ட முறீ ரெனினும்
ஏலவும்மை வழிபடுவார்க் களிக்க அளிக்கின்றோ மென்று
கோலங்காண எழுந்தருளிக் குலவும்பெருமை யிருவருக்கும்
ஞாலமறியப் படிக்காசு வைத்தார் மிழலை நாயகனார்.

–பெரியபுராணம்.

6. பற்றொன்றி லார்பற்றுந் தில்லைப் பரண்பரங் குன்றினின்ற
புற்றொன் றரவன் புதல்வ னெனநீ புகுந்துநின்றால்
மற்றுன்று மாமலரிட்டுன்னை வாழ்த்திவந் தித்தலன்றி
மற்றொன்று சிந்திப்ப ரேல்வல்ல ரோமங்கை வாழ்வகையே.

–திருக்கோவையார்.

7. இயலிசை யிலுசித வஞ்சிக் கயர் வாகி
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி
உனை யெனது ளறியு மன்பைத் தருவாயே
மயில் தகர்க லிடைய ரந்தத் திணைகாவல்
வனசகுற மகளை வந்தித் தணைவோனே
கயிலைமலை யணைய செந்திற் பதிவாழ்வே
கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே.

–திருப்புகழ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சனிக் கிழமை

திருச்சிற்றம்பலம்.

1. செய்ய மேனியன் தேனொடு பால்தயிர்
நெய்ய தாடிய நீலக் குடியரன்
மைய லாய்மற வாமனத் தார்க்கெலாம்
கையில் ஆமல கக்கனி ஒக்குமே.

–தேவாரம்.

2. காலமுண் டாகவே காதல்செய்து உய்ம்மின் கருதரிய
ஞாலமுண் டா னொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண்டான் எங்கள் பாண்டிப் பிரான் தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான் வந்து முந்துமினே.

–திருவாசகம்.

3. வான நாடுடை மைந்தனே ஓ என்பன்
வந்தருளாய் என்பன்
தேன் நெய் ஐந்துடன் ஆடிய படர்சடைப்
பால்வண்ணனே என்பன்
தேனமர் பொழில் சூழ்தரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
ஏன மாமணிப் பூண்அணி மார்பனே
எனக்கருள் புரியாயே.

–திருவிசைப்பா

4. குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி ஆளாய்
மணம்செய் குடிப் பிறந்த
பழவடி யாரொடும் கூடிஎம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

–திருப்பல்லாண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. மறவாமை யான்அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனுந் திருமஞ்சனம் ஆட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச்சனை செய்வார்.

–பெரியபுராணம்.

6. புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
கரங்கடந் தானொன்று காட்டமற் றாங்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றிலம் மாயவனே.

–திருக்கோவையார்.

7. பிறவியலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதி குரு வாக்கியப் பொருளாலே
உனதுபத காக்ஷியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க் குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.

–திருப்புகழ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஆதீன பிரதம பரமாச்சாரிய சுவாமிகள் அருள்திரு நமசிவாய மூர்த்திகளுக்குக் காலை, இரவு இருபொழுதும் பூஜைகள் நடைபெறும். காலை பூஜை நிறைவில் மகா சந்நிதானங்கள் குருமூர்த்திகள் திருமுன்னர் மகா மண்டபத்தில் ஐந்து நமஸ்காரங்கள் சமர்ப்பித்து வழிபடுவார்கள். அப்பொழுது ஓதுவார் மூர்த்திகள், ஒவ்வொரு நமஸ்காரத்திற்கும் ஒரு திருப்பாடலாக ஸ்ரீ முத்தி பஞ்சாக்கர மாலைப் பாடல்களை விண்ணப்பம் செய்வார்கள்.

இரவு பூஜையை நிறைவு செய்து கொண்டு பூஜை தரிசிக்கும் அன்பர்களுக்கு மகா சந்நிதானங்கள் திருநீற்றுப் பிரசாதம் வழங்கி ஆசியருள்வார்கள். பின்னர் திருக்கோயில் முன், ஓதுவார் மூர்த்திகள் மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிய ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர் மாலைத் திருப்பாடல்கள் பத்தையும், ஸ்ரீ கச்சியப்ப முனிவர் அருளிய பஞ்சாக்கர தேசிகர் அந்தாதிப் பாடல் ஒன்றையும் பாட மகா சன்னிதானங்கள் முகமண்டபத்தில் பதினோரு நமஸ்காரங்கள் சமர்ப்பித்து வழிபடுவார்கள். இவை வழக்கத்தில் இருந்து வருகின்றன.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முத்திபஞ்சாக்கர மாலை

1. திருவே! என் செல்வச் சிறப்பே! சிவானந்தத் தெள்அமுத
உருவே! உருவமும் ஊருடன் பேரும்ஒன் றும்புணரா
அருவே! தெளிந்த அறிவே! மெய் யன்பர்க்கு அருளும் தெய்வத்
தருவே! தென் கோமுத்தி முத்திபஞ் சாக்கர சற்குருவே!

2. சுந்தர மால், அயன் வாழ்வும், ஐந் தாரின் சுவர்க்கவைப்பும்
இந்திர ஞாலம், கனாஎனக் கண்டுஉன் இணையடிக்கே
அந்தம்இல் காதலுற்று ஆராத இன்பத்து அமர்ந்திருக்கத்
தந்தருள்! கோமுத்தி முத்திபஞ் சாக்கர சற்குருவே!

3. பண்டுஅறி யாமை பிடித்துவிட்டேனை விடாதுபற்றிக்
கொண்டு, குணவழி விட்டுத் திருத்தி, என் கோதுஅகற்றிப்
புண்டரி கப்பதம் தந்தாய்க்குஎன் னால்ஒரு போகம் உண்டோ?
தண்தமிழ்க் கோமுத்தி முத்திபஞ் சாக்கர சற்குருவே!

4. மாயா படலம் கிழித்து, அருள் ஞானம் விளங்கவைத்து, உன்
நேயஆனந் தத்தில் அமிழ்த்திடு வாய்; நித்த முத்தசுத்தத்
தூயா! சராசர பேதங்கள் யாவையும் தோற்றுவிக்கும்
தாயான கோமுத்தி முத்திபஞ் சாக்கர சற்குருவே!

5. அரணங்கள் மூன்றும் ஏரித்தாய்! சரணம். அதிலும், அன்பர்
மரணம் படாதுஅருள் வைத்தாய்! சரணம். வலியஅந்தக்
கரணங்க ளால்மெலிந்து எய்த்தேன், சரணம். நின் பொற்கழலே
சரணம். தென் கோமுத்தி முத்திபஞ் சாக்கர சற்குருவே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர் மாலை

(மாதவச் சிவஞான யோகிகள் அருளிச் செய்தது)

1. அறிவே! அருட்செல்வமே! நிறை வே! அர சே! அடியார்
உறவே! என் ஆருயிரே! மணி யே! உரு காதநெஞ்சிற்
பிறிவே! துரியங் கடந்த சிவானந்தப் பேரமுதச்
செறிவே! கருணைப் பிழம்பே! பஞ் சாக்கர தேசிகனே!

2. பொய்யும், கவடும், கொடுமையும், வஞ்சமும் பூண்டபொல்லாக்
கையன், கலதி, முழுமூட னேனும்நின் கண்ணருளால்
உய்யும் படிஎன்று கூடும்? எந் தாய்! உண்மை யாளர் அன்பு
செய்யும் துறைசையுள் தேவேபஞ் சாக்கர தேசிகனே!

3. பரிசுஅறி யேன்அருட் பண்புஅறி யேன்எனைப் பற்றும்வினைக்
கரிசுஅறி யேன், அது மாற்றறி யேன்,கல ரோடு இணங்கித்
துரிசுக ளேசெயும் பொல்லா உலகத் தொழும்பனுக்குஉன்
தெரிசனம் கிட்டுவது என்றோ? பஞ் சாக்கர தேசிகனே!

4. மருவேன் உனதடி யார்திருக் கூட்டம் மருவிவஞ்சம்
ஒருவேன், மகளிர் விழிக்கடை நோக்குக்கு உளம்பதைத்து
வெருவேன், அடிமையும் எந்நாள் உனதருள் மேவுவனோ?
திருஆ வடுதுறைத் தேவே!பஞ் சாக்கர தேசிகனே!

5. ஆனந்த வாழ்வில் அடியார்எல் லாரும் அகம்களிப்ப
நான்இந்த மாயத் தொடக்கினில் வீழ்ந்து நலிதல்நன்றோ!
வான் அந்தம் நீண்ட மதில்ஆ வடுதுறை வாழ்முதலே!
தேன்உந்து பங்கயத் தாளாய்பஞ் சாக்கர தேசிகனே!

6. வற்றாக் கருணைத் திருநோக்கும் நின்முக மண்டலமும்,
சற்றே முகிழ்த்த குறுமூர லும்,தட மார்பழகும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொற்றாளும், சின்முத் திரையும்நெஞ் சூடு
பொறித்துவைப்பாய்
செற்றார் புரம்செற்ற தேவே!பஞ் சாக்கர தேசிகனே!

7. தேறாத நெஞ்சும், தெளியாத சிந்தையும், தேங்கிஇன்பம்
ஊறாத கண்ணும், ஒழியாக் கவலையும், உன்புகழே
கூறாத நாவும் எனக்கே தகும்என்று கூட்டினையே!
சீறாது அருள்செய்யும் தேவே!பஞ் சாக்கர தேசிகனே!

8. நின்னருள் நோக்கினுக்கு எவ்வள வேனும் நெகிழ்ந்துருகாது
என்னுடை வன்மனம் மின்னார் விழிக்கடைக்கு என்னில்
அந்தோ!
வன்னியின் நேர்மெழு காய்உருகா நிற்கும் மாயம்என்னே!
செந்நெறி யாய்நின்ற தேவே!பஞ் சாக்கர தேசிகனே!

9. பிறவித் துயர்இனி ஆற்றேன், அடைக்கலம்; பேயுலகின்
மறுகித் திரிந்து அலைந்து எய்த்தேன், அடைக்கலம்
மங்கைநல்லார்
உறவைத் தவிர்த்துஉய்யக் கொள்வாய்! அடைக்கலம்;
உண்மைஅன்பர்
செறிவுக்குள் வாழும்மெய்த் தேவே!பஞ் சாக்கர தேசிகனே!

10. இருவினை தாம்இவை, மும்மலம் ஈங்கிவை, ஈதுசிவம்,
கருவுறும் ஆருயிர் உண்மை இதுஎன்று காட்டவல்ல
குருபரன் நீயன்றி வேறுஅறி யேன்இக் குவலயத்தில்
திருவெண்ணெய் மெய்கண்ட தேவே!பஞ் சாக்கர தேசிகனே!

நமச்சிவாய குருவின் நற்றாள் போற்றி!
சிவஞான முனிவரின் சீரடி போற்றி!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பஞ்சாக்கர தேசிகர் அந்தாதி

கட்டளைக் கலித்துறை

1. ஓ குருவாயருள உயிர்க்கின்மை யாரும் குறிக்கொடு உய்ய
வருவாய் அருவுருவாய் அருவாய் அவைதானென நற்
பெருவான் பொருடன் பெரும்பெயரே பெயராக வந்த
ஒருவாய்மை தன்னை நினையினும் உள்ளம் உருகுவதே.

2. நகைக்கின்ற செங்கனிவாயும் எதிர்ந்தோர் நவை முழுதுந்
துகைக்கின்ற பேரருள் பார்வையும் மும்மலத் தொக்குவிடத்
தகைக்கின்ற சின் முத்திரையும் தனிக்கரப் புத்தகமும்
உகைக்கின்றவால் என்னைப் பஞ்சாக்கரவன் ஓண் பூங்கழற்கே.

3. பதமீலர் கண்டோர் எறுழ்ப் பகடு ஊர்தி பதி குறுகார்
இதமருள் செங்கை கண்டோர் பிரமன் கையெழுதப்படார்
கதமலை ஈருரி போர்த்தருள் பஞ்சாக் கரவன் நுதல்
மதவிழி கண்டோர் துரப்பர் மதவேள் மலர்க்கணையே.

4. காசினிமீது பிறந்தவர் தம் முளுங் காவிரி சூழ்ந்து
ஆசிறு நாட்டு உற்பவித்தவர் தூயர் அவர்களுள்ளும்
மாசறு பஞ்சாக் கரவன் வதிஅரசூரின் உற்றோர்
தேசுறு தூயர வருளும் தூயர் சென்று ஏத்து நரே.

5. செப்பற்கு அரியன சிந்தைக்கு அரியன சேர்பொருளொன்று
ஓப்பற்கு அரியன உள்ளே விரவி ஓண்மா மதிபோல்
பப்புற்ற வாணவம் பாற்றி வருவன பண்பினர்க்கு
வைப்பிற் பொலிவன பஞ்சாக் கரவன் மலரடியே.

6. வருவதும் போவதுமாய் உழல்வீர் வம்மின் வந்தனி ஏற்
தருநிதி சிந்தாமணி காமதேனுவும் தந்து அருளும்
பொருவறு போகமெலாம் தரும் போகமெலாம் வெறுத்தால்
ஒருவரு முத்தியும் நல்கும் பஞ்சாக்கர ஒள்ளொளியே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. தேசிக நாதன் சிவஞான தேவன் செங்கைத்தலமுன்
வீசி நின்றாடிய அம்பலவாணன் வியன் உலகம்
பேசிய பஞ்சாக் கரவன் பிறங்கு அருள் தாள்மலரைக்
கூசி நின்றேத்திய மாதவத்தார்க்கு என் குறையுளதே



ஒப்பிலாமுலையம்மை பிள்ளைத்தமிழ்

மூவர் மொழிந்த திருமுறைப்பண்
முறையிற் கரத்தா லொத்தறுத்து
முதிருந் தமிழ்வல் லவரோத
முற்றிடு செவியாற் றாம்பழகிப்

பூவை களுமஞ் சிறைச்சுகமும்
புதல்வண் டினங்கள் சுதிகூட்டப்
புகலு மதைக்கின் ரைமிதுனர்
புகழ்ந்து கேட்கும் பொழில்பலவாய்

ஏவிற் றிகழும் விழிமடவார்
இரும்பந் தடிக்கும் பொழுதிலவர்
இட்ட மணிகள் பலசிதறி
எங்கும் பரந்தல் லிருள்சீத்துத்

தேவ ருலகைத் தகுந்துறைசைச்
செல்வீ! தாலோ தாலேலோ!!
செங்கண் விடையேற் றினர்மேவுஞ்
செல்வீ! தாலோ தாலேலோ!!

In public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

THIRUVAVADUTHURAI ADHEENAM SARASWATHI MAHAL LIBRARY & RESEARCH CENTRE
THIRUVAVADUTHURAI - 609 803.
TAMIL NADU - SOUTH INDIA.